# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

# அகத்தியர்

**“மனமது செம்மை யானால் மந்திரம் செபிக்க வேண்டா**
**மனமது செம்மை யானால் வாயுவை உயர்த்த வேண்டா**
**மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மை யானால் மந்திரம் செம்மை யாமே!”**

(அகத்தியர் ஞானம்)

மகத்துவம் நிறைந்த அகத்திய மாமுனிவர் பதினெண் சித்தர்களில் தலை *சிறந்தோன்;* தமிழின்பால் மாளாக் காதல்கொண்டு தென்னகம் வந்து பொதிகை மலையில் வாழ்ந் தோன்; இயல், இசை, கூத்து என்னும் முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் அகத்தியம் என்னும் நூலை இயற்றிய (தமிழ் *மொழியின்* முதல்) இலக்கணி; திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளோடும் முருகனோடும் முதற்சங்கம் *வீற்றிருந்த* தலைமைப் *புலவோன்;* உடற்பிணியும் உளப்பிணியும் பிறவிப்பிணியும் போக்கப் பன்னூல்களைத் தண்டமிழில் யாத்த சித்த மருத்துவன்; அளவையியல், இசை, சோதிடம், வானியல், யோகம் முதலான துறைகளில் *கரைகண்டோன்;* வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபின் தலைமகன்.

இத்தகைய பெருமைமிக்க அகத்தியரின் சிறப்புகள் குறித்தும் இந்தியச் *(பாரதச்) சிந்தனை மரபிற்கு இவர் ஆற்றிய பங்களிப்புகள் குறித்தும், தெரிந்து கொள்ளுதலும் புரிந்து கொள்ளுதலும், தமிழர் தம் கடமையாகும்.*

## பிறப்பும் பெயர்க்காரணமும்

தமிழ் முனி, குருமுனி, குறுமுனி, பொதிகை முனி என்றெல்லாம் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் அகத்தியர், குடத்தில் தோன்றியவர் என்று தொன்மங்கள் கூறுகின்றன. இதன் காரணமாகவே இவரைக் குடமுனி

என்றும் கும்பமுனி என்றும் கும்ப சம்பவர் என்றும் அழைப்பர். 'நான்' என்னும் அகத்தைப் போக்கி நின்றமையாலும், விந்திய மலையின் அகந்தையை அடக்கினமையாலும் 'அகத்தியர்' எனப் பெயர்பெற்றார் என்றும் கூறுவர். அகத்தியம் என்ற சொல்லுக்கு, 'இன்றியமையாமை' என்றும் பொருள் கொள்ளலாம். தமிழ் மொழியை முழுமையாக அறிந்து கொள்வதற்கு இன்றியமையாத இலக்கணத்தை வகுத்தவர் என்பதால், இவர் 'அகத்தியர்' என்று அழைக்கப்பட்டதாகவும், இவருடைய நூல் 'அகத்தியம்' என்றானதாகவும் சொல்வதுண்டு. தமிழ் இலக்கணம் அருளியதால் தமிழ் முனிவர் என்றும், அதிக தவம் செய்ததால் மா தவ முனிவர் என்றும், மிகப் பெரிய முனிவர் என்பதால் மாமுனி என்றும், முனிவர்களுக்கெல்லாம் குரு என்பதால் குருமுனி என்றும், போற்றுதற்கு உரியவர் என்பதால் திருமுனி என்றும், பொதிகையில் வாழ்ந்தவர் என்பதால் பொதிகை முனி என்றும், இன்றளவும் அழியாப் புகழ் பெற்றமையால் அமர முனி என்றும், குறுகிய வடிவம் கொண்டவராதலால் குறு முனி என்றும் சிறப்புப் பெயர்கள் பலவற்றைப் பெற்றவர். 'தட்சிணாமூர்த்தி குருமுகம் நூறு' என்றொரு நூல் உண்டு; இந்நூலின் குறிப்புகள், அகத்தியருக்குத் தட்சிணாமூர்த்தி என்றொரு பெயரும் உண்டு எனத் தெரிவிக்கின்றன.

போகர் தருகிற குறிப்புகளின்படி, மார்கழி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் அகத்தியர் பிறந்ததாகத் தெரிகிறது.

**"சிறந்ததொரு அகத்தீசர் பிறந்தநேர்மை**
**சிறப்பான தனுர்மாதம் என்னலாகும்**
**துறந்ததொரு ஆயில்யம் மூன்றாம் பாதம்**
**துப்புறவாய் அவர்பிறந்த நாளுமாச்சு"** (போகர் ஏழாயிரம், 5882)

இதனால், ஆண்டுதோறும் இந்த நாள் **தேசியச் சித்த மருத்துவ தின**மாகக் கொண்டாடப்படுகிறது.

## தொன்மங்களில் அகத்தியர்

அகத்தியர் பற்றிப் பல்வேறு தொன்மக்கதைகள் காணப்படுகின்றன. இவரது மனைவி விதர்ப்ப நாட்டு மன்னன் மகளாகிய உலோபாமுத்திரை ஆவார். வசிட்டர் இவரின் சகோதரர் ஆவார்.

அகத்தியரின் பிறப்பே மனிதப் பிறவியில் இருந்து வேறுபட்டது. தாரகன் என்னும் அசுரன் கடுந்தவம் புரிந்ததன் மூலம், கடலுக்குள் சென்று ஒளிந்து வாழும் வரத்தினையும், ஒரு குடம் அளவு உள்ளவரால்தான் தனக்கு மரணம் அமைய வேண்டும் என்ற வரத்தினையும் பிரம்மனிடம் இருந்து பெற்றுக்கொண்டான். பிற அரக்கர்களுடன் சேர்ந்து, வரத்தைத் தவறாகப் பயன்படுத்தி உலகை அச்சுறுத்தி வந்தான். உலக மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தேவலோகத்திலிருந்து இந்திரன் கோபத்துடன் தாரகனை அழிக்கப் பூலோகம் வந்தடைந்தார். இதனைக் கேள்வியுற்ற தாரகனோ கடலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான். தாரகனைப் பின் தொடர முடியாத இந்திரன் முதலில் அக்கினி பகவானை அழைத்து, ’உன் வெப்பத்தால் இந்தக் கடலை ஆவியாக்கிவிடு’ என்று கூறினார். ஆனால் அக்கினி பகவானோ ‘கடல் நீர் இருந்தால்தான் மழை பெய்யும். தண்ணீர் இல்லாமல் எந்த உயிரும் பூமியில் வாழ முடியாது. இந்தப் பாவத்தை நான் செய்ய மாட்டேன்’ என்று கூறிவிட்டார். இரண்டாவதாக இந்திரன் வாயு பகவானை அழைத்து வறண்ட காற்றினால் கடலை வற்ற வைக்கும்படி கூறினார். ஆனால் வாயு பகவானும், அக்னிதேவன் கூறிய அதே காரணத்தைக் கூறித் தன்னாலும் முடியாது என்று கூறிவிட்டார். இதனால் கோபமடைந்த இந்திரன், வாயு பகவானுக்கும், அக்னிபகவானுக்கும் பூமியில் மனிதனாகப்

பிறந்து துயரப்பட வேண்டும் என்ற சாபத்தினை அளித்தார். அக்கினி பகவான் மித்திரா என்ற பெயரிலும், வாயு பகவான் வர்ணன் என்ற பெயரிலும் பூமியில் மனிதனாகப் பிறந்தனர். ஒரு நாள் குளத்தில் நீராடிக் கொண்டிருக்கும் போது, மித்திரனும், வர்ணனும் ஊர்வசி என்னும் தேவலோகக் கன்னிகையைக் கண்டனர். இப்படிப்பட்ட பேரழகியை அவர்கள் கண்டதில்லை. அப்போது அவர்களிடம் இருந்து வீரியம் வெளிப்பட்டது. மித்திரர் தன் கையில் இருந்த கும்பத்தில் வீரியத்தை வெளியிட்டார். வர்ணன் தன் வீரியத்தைத் தண்ணீரில் விட்டார். கும்பத்தில் இருந்து அவதரித்தவர்தான் அகத்திய முனிவர். தண்ணீரிலிருந்து அவதரித்தவர்தான் வசிஷ்ட முனிவர். அகத்தியர் குடத்தின் அளவே இருந்தார். குடத்தின் அளவு உள்ள அகத்தியரிடம் தேவர்கள் சென்று தாரகன் செய்து வரும் கொடுமைகளைப் பற்றிக் கூறினார்கள். தாரகனை அழித்துத் தங்கள் அனைவரையும் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர் தேவர்கள். அகத்தியரும் தேவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். தாரகனை அழிக்க அகத்தியர் 12 ஆண்டுகள் தண்ணீரின் மேல் தவம் செய்தார். கடும் தவத்தினால் பல அரிய வரங்களை அகத்தியரால் பெறமுடிந்தது. அகத்தியர் இந்திரனுடன் இணைந்து தாரகனையும் அவனது அசுர குலத்தையும் அழிக்கச் சென்றார்கள். இதனை அறிந்த தாரகன் மறுபடியும் கடலுக்குள் சென்று ஒளிந்து கொண்டான். அகத்தியர் தன் தவ வலிமையினால் பெற்ற சக்தியின் காரணமாகக் கடல் நீர் அனைத்தையும் குடித்து விட்டார். அதன்பின்னர் இந்திரன் கடலுக்குள் சென்று தாரகனை வதம் செய்தார். தாரகனை வதம் செய்த பிறகு அனைத்து நீரையும் கடலிலேயே விட்டு விட்டார் அகத்தியர்.

## உலகத்தைச் சமநிலை ஆக்குதல்

அகத்தியர் வடக்கேயுள்ள இமய மலையிலே நடைபெற்ற சிவன் – பார்வதி திருமணத்திற்குச் சென்றிருந்ததார். அப்போது தேவர்களும் முனிவர்களும் அடியவர்களும் அங்கே கூடி அத்திருமணக் காட்சியைக் காண்பதற்குக் கூடி நின்றார்கள். அக்கூட்ட மிகுதியால் பூமியின் வடபகுதி தாழ்ந்தது. தென்பகுதி உயர்ந்தது. இதனைக் கண்ட சிவபெருமான் அகத்தியரை அழைத்துத் தென்பகுதிக்குச் சென்று பூமியைச் சமப்படுத்து என்றார். சிவபெருமானின் திருக்கல்யாணக் காட்சியைக் காணாமல் செல்ல அகத்தியருக்கு விருப்பமில்லை. “உங்களது திருக்கல்யாணக் கோலத்தை நான் பார்க்கும் யோகம் இல்லையா?” எனச் சிவபெருமானைக் கேட்க, அதற்கு “நீ வேண்டும் இடத்தில், வேண்டும் நேரத்தில் வந்து உனக்குக் காட்சி தருவோம்” எனச் சிவபெருமான் கூறினார். உடனே மனமகிழ்ச்சியோடு தென்திசை வந்து பூமியைச் சமப்படுத்தினார்.

அவ்வாறு செல்லும் வழியில், தென் திசைக்குச் செல்ல வழிவிடாமல் நின்ற விந்தியமலை, அகத்தியரைக் கண்டதும் பணிந்து தாழ்ந்து நின்றது. தான் தென்திசை சென்று வரும் வரையில் பணிந்து இருப்பாயாக என்று அதனிடம் கூறிச் சென்ற அகத்தியர், மீண்டும் வடதிசை செல்லாதிருந்தார். ஆதலால் விந்திய மலையும் அதன் பின் உயரவில்லை எனக்கூறப்படுகிறது. தென்திசைக்கு வந்த அகத்தியர் முருகப்பெருமானிடம் உபதேசம் பெற்றார். அதன் பின்னர்ப் பொதிகை மலையில் தங்கி முருகக் கடவுளின் ஆணைப்படி அகத்தியம் என்னும் நூலை இயற்றினார்.

### வாதாபி, வில்வலன் அரக்கர்களுக்குப் பாடம் புகட்டியமை

வாதாபி, வில்வலன் என்னும் அரக்கர்கள் இருவரில் வில்வலன் வேதியர் உருக்கொண்டு வழியில் செல்லும் வேதியர், முனிவர் முதலானோரை விருந்திற்கு அழைத்து வாதாபியைக் கறியாய்ச் சமைத்துப் படைத்து,

வாதாபியைத் திரும்ப அழைக்க; அவன் அவர்கள் வயிற்றைக் கிழித்து வெளியே வருவதால் அவர்கள் இறந்து போவார்கள். முனிவர்கள் இதனை அகத்தியரிடம் முறையிடவே, அகத்தியர் அவர்களிடம் விருந்து உண்ணச் சென்றார். வில்வலன் உணவு படைத்துவிட்டு அகத்தியர் வயிற்றிலிருக்கும் வாதாபியைக் கூப்பிட அகத்தியர் “வாதாபி ஜீர்ணோபி” என்று வயிற்றைத் தடவ வாதாபி இறந்தான். நிலமையை அறிந்த வில்வலன் அகத்தியரிடம் மன்னிப்புக் கோரினான்

## அகத்தியரின் இசைப்புலமை

அகத்தியர் இசையிலும் தேர்ச்சி பெற்றவராயிருந்தார் என்பதைக் கீழ்க்காணும் கதையின் மூலம் உணரலாம். இலங்கை மன்னன் இராவணன் மிகவும் புகழ் பெற்ற இசைப் புலவனும் ஆவான். ஒருசமயம் இராவணன் பொதிகை மலைக்கு வந்து அகத்தியரோடு இசைபாடப் போட்டிபோட்டான். இசைத்தமிழிலும் வல்லவராகிய முனிவர் அகத்தியர் பெருமான், இராவணன் கையிலிருந்த வீணையை வாங்கி இன்னிசை பாடினார். அதனைக் கேட்டு மெய்மறந்து நின்றான் இராவணன்.

இசை ஒலிகேட்ட பறவைகளும் விலங்குகளும் மரஞ்செடிகொடிகளும் கூடத் தம்மை மறந்து அசையாது நின்றன. அப்போது பொதிகை மலையும் உருகிவிட்டது. அகத்தியர் அந்த வீணையை உருகிநின்ற பாறையினுள்ளே புகுத்தி, இராவணனை நோக்கி இசைபாடிப் பாறையை உருகச் செய்து தன் வீணையை எடுத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டார். இராவணேசுவரன் மிகுந்த அச்சத்தோடு அவருடைய திருவடிகளிலே விழுந்து கும்பிட்டுத் தன்னுடைய சிறுமையை மன்னித்தருளுமாறு வேண்டிநின்றான். அகத்தியர் மீண்டும் தம் வீணையை மீட்டிப்பாடி, இளகி நின்ற மலையிலிருந்து இராவணனுடைய வீணையை எடுத்துத் தந்து அவனை வாழ்த்தியருளினார். இராவணன்

அவருடைய திருவடிகளில் பலமுறை விழுந்து வணங்கிப் பின் இலங்கை சென்றான்.

### காவிரி உருவான கதை

சிவ பூசை செய்வதற்காகக் கமண்டலத்தில் அகத்தியர் கொண்டு வந்த கங்கை நீரை விநாயகர் காகமாக உருக் கொண்டு சாய்த்துவிட, கமண்டலத்திலிருந்து வழிந்து ஓடிய நீரே காவிரி ஆறு ஆனது.

### கம்பராமாயணத்தில் அகத்தியர்

'நீண்ட தமிழால் உலகை நேமியிலளந்தான்'என்றும் 'ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்தான்' என்றும் 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்' என்றும் கம்பராமாயணத்தில் அகத்தியர் புகழ்ந்து பாராட்டப்பட்டுள்ளார்.

அகத்தியர் தம்மைத் தேடிவந்து வணங்கிய இராமபிரானுக்கு மனமுவந்து பல மந்திரங்களை அருளிச் செய்து தம்மிடமிருந்த தெய்விகம் பொருந்திய வில்லையும் கணைகள் நிறைந்த அம்பறாத் தூணியையும் தந்தருளி இராவணனை வெற்றிகொள்ள ஆசியும் வழங்கினார் என்பது கம்பராமாயணம் கூறும் அகத்தியருடைய பெருமைகளாகும்.

### கந்தபுராணத்தில் காணப்படும் அகத்தியர் வரலாறு

கந்தபுராண அசுர காண்டத்தில் 1.அகத்தியப் படலம், 2.கிரவுஞ்சப் படலம், 3.விந்தம் பிலம்புகு படலம், 4.வில்வலன் வாதாபி வதைப்படலம், 5.காவிரி நீங்கு படலம், 6.திருக்குற்றாலப் படலம் என்னும் ஆறு படலங்களில் அகத்தியர் வரலாறும் செயல்களும் பெருமைகளும் விவரிக்கப் பெற்றுள்ளன.

### தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்தமை

அகத்தியர் பாண்டிய நாட்டுக்குச் சென்று காய்சின வழுதியின் அவையில் சேர்ந்தார். அங்கு முதல் தமிழ்ச் சங்கத்தில் இடம்பிடித்துப் பின் அதன் தலைவராகவும் ஆனார். அக்காலக்கட்டத்தில் பிரளயம் ஏற்பட்டுப்

பெரும் கடல்கோள் நடந்தது. பலநூல்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டன. இதனை அகத்தியர் தம் பெருநூல் காவியத்தில் குறிப்பிடுகிறார்.

**தைத்ததொரு நூலெல்லாம் பிரள யத்தில்**
**தாரணியில் மிதந்துவிடக் கண்டோர் தாமும்**
**நைந்ததொரு பெருநூல்கள் கருவியெல்லாம்**
**நலமாக மிதந்துவிடக் கண்டிட் டோமே!**
**துண்டிதமாய்ச் சில நூல்கள் சாகரத்தில்**
**சுருதிபொரு ளானதுவும் மறைந்து போச்சு**
**அண்டியே கடலோரம் மிதந்த நூல்கள்**
**அகப்பட மட்டுமல்லோ அறிந்தோம் யாமே!**

(பெருநூல் காவியம் 12000, முதல் காண்டம், பா.எண்: 271-272)

தென்மதுரையில் இருந்த தலைச்சங்கத்திலும் கபாடபுரத்தில் இருந்த இடைச்சங்கத்திலும் அகத்தியர் வீற்றிருந்தார் என இறையனார் களவியல் குறிப்பிடுகிறது. இவ்விரு சங்கத்திலும் இவர் இயற்றிய அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூல் வழக்கில் இருந்தது.

## அகத்தியரின் சீடர்கள்

தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியார், நற்றத்தனார், வாமனர் ஆகிய பன்னிருவரும் அகத்தியரின் சீடர்களாக விளங்கினர் என்று கூறுவர்.

## சித்த மருத்துவத் துறையில் அகத்தியர்

சித்தராய் விளங்கிய அகத்தியரைப் பற்றி “அகத்தியர் காவியம் பன்னிரண்டாயிரம்” வாயிலாகச் சில கருத்துகளை மட்டுமே தெரிந்து கொள்ள முடிகிறது. அகத்தியர் சித்த மருத்துவத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது. பல நோய்களுக்கும் மருத்துவ ஐயங்களுக்கும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே

தெளிவாக விளக்கம் கொடுத்துள்ளார். அகத்தியர் பெயரில் வெளியாகியுள்ள சமரச நிலை ஞானம் என்னும் நூலில் உடம்பில் உள்ள முக்கியமான நரம்பு முடிச்சுகள் பற்றிய விளக்கம் காணப்படுகிறது. அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள் என்னும் நூலில், பதினெட்டு வகையான மனநோய் பற்றியும் அதற்குரிய மருத்துவம் பற்றியும் விளக்கப்பட்டிருக்கின்றன. அகத்தியர் தமது மந்திரக் கிரிகை 64 எனும் நூலில் 18 வகையான மருந்துகளைக் கூறியுள்ளார். மேலும் மருந்துகளைத் தரும் 6 வகைகளையும் அந்நூலில் குறிப்பிடுகிறார். அவை,

1. துவளை (புற மருந்து), 2. வேது (ஆவிப்புகை பிடித்தல்), 3. உள்ளுக்குக் கொடுத்தல் (வாய்வழியே கொடுத்தல்), 4. நாசியம் (நாசி வழியே மருந்திடல்), 5. கலிக்கம் (கண்ணில் இடுமருந்து), 6. மந்திரம் (உளவியல் சிகிச்சை).

### அகத்தியர் ஆலயங்கள்

அகத்தியருக்குத் தமிழகத்தில் மட்டுமல்லாது பாரத தேசம் முழுவதும் ஆலயங்கள் உள்ளன. அகத்தியர் பெயரில் ஊர்களும் உள்ளன.

தமிழ்நாட்டில் இருக்கும் அகத்தியர் கோயில்கள் பல உள்ளன. பொதிகை மலையின் உயர்ந்த சிகரம் 'அகத்தியர் மொட்டை' என்ற பெயருடன் திகழ்கிறது. அகத்தியர் மொட்டையில் தோன்றுகின்ற பேராறு, பொதிகை மலையின் நடுவே விளங்குகின்ற ' பாண தீர்த்தம்' என்ற இடத்தில் அருவியாக விழுந்து, மேலும் இறங்கி ஓடிவந்து பழைய பாபநாசம் என்ற இடத்திலும் அருவியாக இறங்கிப் பின்னும் ஓடிவந்து மலையின் அடிவாரத்தில் இறங்குகிறது. இவ்வடிவாரமே பாபநாசம். பழைய பாபநாசத்தில் முருகன் கோயிலும், அகத்தியர் கோயிலும் இருக்கின்றன. அங்கிருந்து பத்துக் கிலோமீட்டர் தூரம் கிழக்கே வந்தால் அம்பா சமுத்திரம் என்னும் ஊர்

உள்ளது. அங்கும் ஸ்ரீலோபாமுத்திரை உடனுறை ஸ்ரீஅகத்தீஸ்வரர் ஆலயம் உள்ளது,

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே அகத்தியான் பள்ளி என்ற ஊரில் அருள்மிகு பாகம்பிரியாள் உடனுறை அகத்தீஸ்வரர் திருக்கோயில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அகத்தீஸ்வரம் என்னும் ஊர் உள்ளது. அங்கும் அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனுறை அகத்தீஸ்வரர் ஆலயம் உள்ளது, மேலும் அதே மாவட்டத்தில் வடசேரியில் அருள்மிகு (உ)லோபாமுத்திரை சமேத அகத்தீஸ்வரர் ஆலயம் உள்ளது.

### அகத்தியர் சமாதி

அகத்தியர் அனந்தசயனம் என்ற திருவனந்தபுரம் அனந்த பத்மநாபசுவாமி கோயிலில் சமாதியடைந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு சிலர் அவர் கும்பகோணத்தில் உள்ள கும்பேசுவரர் கோவிலில் சமாதி அடைந்தார் என்று கூறுகின்றனர். இன்னும் அவர் பொதிகை மலையில் வாழ்ந்துகொண்டிருப்பதாகவே கருதுபவர்களும் உண்டு.

### கல்வெட்டில் அகத்தியர்

புதுச்சேரியில் ஒழுகரையில் (இன்றைய பெயர் உழவர்கரை) உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் அகத்தீஸ்வரம் என்னும் பெயர் காணப்படுகிறது. இந்தக் கோயிலை அகத்தீஸ்வரமுடையார் ஆலயம் என்றும் அழைக்கின்றனர். இதன் மூலம் புதுவையின் பழைய பெயர்களுள் ஒன்றாக அகத்தீஸ்வரம் என்னும் பெயர் இருந்ததை அறியமுடிகிறது.

### அகத்தியர் ஒருவரா பலரா?

அகத்தியர் ஒருவரா பலரா என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துகள் காணப்படுகின்றன. இருப்பினும், காலத்தையும்

காலக்கணக்குகளையும் கடந்து ஒருவரே வாழமுடியும் என்னும் யோக நிலையின் அடிப்படையில், அகத்தியர் ஒருவரே என்று எடுத்துக் கொள்வோம்.

## அகத்தியர் எழுதிய நூல்கள்

ரிக் வேதத்தில் 26 சூக்தங்கள் அகத்தியர் பெயரால் அமைந்துள்ளன; தினை உள்ளிட்ட தானியங்கள், அம்புகள் போன்ற அஸ்திரங்கள், தர்ப்பைப் புல், நுண்கிருமிகள் போன்ற பல தகவல்கள் இம்மந்திரங்களில் காணப்படுகின்றன (ரிக்வேதம் 1-189-10; 1-191-30).

அகத்தியம் எனும் முதல் தமிழிலக்கண நூலை அகத்தியர் எழுதியுள்ளார். எனினும் இந்நூல் கிடைக்கப்பெறவில்லை.

**“இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே**
**எள்ளின் றாயின் எண்ணெயும் இன்றே**
**எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல**
**இலக்கியத் தினின்று எடுபடும் இலக்கணம்”**

என்னும் நூற்பா அகத்தியனார் இயற்றியது என்று மேற்கோள் காட்டுவர்.

‘அகத்திய சம்ஹிதை’ என்னும் வடமொழி நூலும் இவரால் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சித்தர்களுள் அகத்தியரின் பெயரில் வழங்கிவரும் நூல்களே மிகப் பலவாகும். அவற்றுள் சிலவற்றின் பட்டியல் பின்வருமாறு.

1. **அகத்திய நாயனார் அருளிச்செய்த சகல கலைஞானம் 1200**
2. **அகத்திய முனிவர் அருளிச் செய்த அகண்டித அகராதி**
3. **அகத்திய முனிவர் அருளிச் செய்த அட்டகர்மம்**
4. **அகத்திய முனிவர் அருளிச் செய்த வைத்திய காவியம் 1500**
5. **அகத்தியர் 1200**
6. **அகத்தியர் 12000**
7. **அகத்தியர் 5000**
8. **அகத்தியர் அகராதி**

9. அகத்தியர் அசுவ வாகடம்
10. அகத்தியர் அட்டகர்ம மூலிகை வசீகரம்
11. அகத்தியர் அட்டவணை
12. அகத்தியர் அவத்தைக்குறி
13. அகத்தியர் அவிழ்த சாரம்
14. அகத்தியர் அறுசுவை நிகண்டு
15. அகத்தியர் அறுபத்து நாலு மூலிகை விவரம்
16. அகத்தியர் அன்னசாரம் – தான்ய வர்க்கம்
17. அகத்தியர் அன்னசாரம் – ரச வர்க்கம்
18. அகத்தியர் அனுபவ வைத்திய முறை
19. அகத்தியர் அனுபவ வைத்தியம்
20. அகத்தியர் அனுபோக சூத்திரம்
21. அகத்தியர் இந்திரஜால நிகண்டு 200
22. அகத்தியர் உட்கருச் சுருக்கம்
23. அகத்தியர் உதரக்கிரியை
24. அகத்தியர் ஊழிக்கட்டுச் சூத்திரம்
25. அகத்தியர் எழுவகைத் தோற்றம்
26. அகத்தியர் ஐந்து
27. அகத்தியர் ஐம்பதாயிரத்தில் சஞ்சீவி
28. அகத்தியர் ஐம்பது
29. அகத்தியர் ஔஷத முறை
30. அகத்தியர் கட்டு வகைகள்
31. அகத்தியர் கர்ப்பக் கோள்
32. அகத்தியர் கர்ப்பச் சூத்திரம்
33. அகத்தியர் கர்ப்பமுறை சூத்திரம்
34. அகத்தியர் கர்மகாண்டம்
35. அகத்தியர் கர்மகாண்டம் 300
36. அகத்தியர் கர்மசூத்திரம்

37. அகத்தியர் கர்மநிவர்த்தி சூத்திரம்
38. அகத்தியர் கர்மநிவர்த்தி நடுக் காண்டம்
39. அகத்தியர் கர்ம வியாபகம்
40. அகத்தியர் கரிசால் 300
41. அகத்தியர் கரிசில் பஸ்மம் 200
42. அகத்தியர் கருக்கிடை சுருக்கம்
43. அகத்தியர் கருக்குரு 1000
44. அகத்தியர் கருமான சூத்திரம்
45. அகத்தியர் கலைஞானச் சுருக்கம்
46. அகத்தியர் கலைஞானச் சூத்திரம்
47. அகத்தியர் கலைஞானச் சூத்திரம் 1200இல் வாத காண்டம்
48. அகத்தியர் களங்கு 60
49. அகத்தியர் கற்சுண்ணம்
50. அகத்தியர் காமரூமி இலேகியம்
51. அகத்தியர் காயசித்தி வழலைச் சூத்திரம்
52. அகத்தியர் குணவாகடம்
53. அகத்தியர் குரு செயநீர்60
54. அகத்தியர் குருநாடி
55. அகத்தியர் குருநூல்
56. அகத்தியர் குருநூல் 60
57. அகத்தியர் குருநூல் முப்பு 50
58. அகத்தியர் குருநூல் வைத்தியம் 600
59. அகத்தியர் குழம்பு
60. அகத்தியர் குழம்பு வகை வாகடம்
61. அகத்தியர் குளிகை
62. அகத்தியர் குளிர்ச்சி எண்ணெய்
63. அகத்தியர் கேசரி நூல் ஜாலத்திரட்டு

64. அகத்தியர் சக்கர விதி
65. அகத்தியர் சஞ்சீவி
66. அகத்தியர் சண்முக சாலம்
67. அகத்தியர் சத்தி சாலம்
68. அகத்தியர் சப்த காண்டம்
69. அகத்தியர் சமரச நிலை ஞானம்
70. அகத்தியர் சரக்கு 100
71. அகத்தியர் சரக்கு வைப்பு
72. அகத்தியர் சிவசாலம்
73. அகத்தியர் சுருக்கம்
74. அகத்தியர் சுவாமி காவிய நிகண்டு
75. அகத்தியர் சூத்திர வாதம்
76. அகத்தியர் சூத்திரம்
77. அகத்தியர் செந்தூரம் 300
78. அகத்தியர் சோடசமாலை என்கிற அஷ்டாதி மாலை
79. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம்
80. அகத்தியர் சௌமிய சாகரம்
81. அகத்தியர் தண்டகம்
82. அகத்தியர் தத்துவம்
83. அகத்தியர் தர்க்க சாஸ்திரம்
84. அகத்தியர் தர்க்கம்
85. அகத்தியர் திரட்டு 80
86. அகத்தியர் திராவகச் சூத்திரம்
87. அகத்தியர் திரிபுவனக் கண்ணாடி
88. அகத்தியர் தீட்சை நாடி சூத்திரம்
89. அகத்தியர் தீட்சை விதி 200 (மூதண்ட லேகியம்)
90. அகத்தியர் நாடி நிதானம்
91. அகத்தியர் நாடி பரீட்சை

92. அகத்தியர் நாடி வைத்தியக் குறிப்பு
93. அகத்தியர் நாயனார் திரட்டு 80
94. அகத்தியர் நாயனார் வாகட வெண்பா
95. அகத்தியர் நாலுகாண்டம் 1200
96. அகத்தியர் நிகண்டு
97. அகத்தியர் நேத்திர வாகடம்
98. அகத்தியர் நோயின் சாரம்
99. அகத்தியர் பச்சிலை மூலிகை
100. அகத்தியர் பச்சை
101. அகத்தியர் பஞ்சபட்சி
102. அகத்தியர் பட்சணி
103. அகத்தியர் பதார்த்த குணாதிசயச் சூத்திரம் பதினாறு
104. அகத்தியர் பரிபாஷை
105. அகத்தியர் பரிபாஷை 5ஆம் காண்டம்
106. அகத்தியர் பரிபூரணம்
107. அகத்தியர் பரிபூரணம் 1200 (வைத்திய காண்டம்)
108. அகத்தியர் பலதிரட்டு
109. அகத்தியர் பற்பமும் செந்தூரமும்
110. அகத்தியர் பற்பவகை
111. அகத்தியர் பாடல்
112. அகத்தியர் பால சிகிட்சை
113. அகத்தியர் பாலவாகடம்
114. அகத்தியர் பிள்ளைப்பிணி வாகடம் 200
115. அகத்தியர் பின்னூல் 80
116. அகத்தியர் பூரணக் காவியம்
117. அகத்தியர் பூரணச் சூத்திரம்
118. அகத்தியர் பூரணச் செந்தூரம்
119. அகத்தியர் பூரணத் திரட்டு

120. அகத்தியர் பூரணம் 400
121. அகத்தியர் பூஜாவிதி
122. அகத்தியர் பெருங்குழம்பு
123. அகத்தியர் பெருநூல் 1200
124. அகத்தியர் பெருநூல் முதற்காண்டம், இரண்டாம் காண்டம்
125. அகத்தியர் பேதி தைலம்
126. அகத்தியர் மந்திரக் கிரிகை 64
127. அகத்தியர் மாந்திரீக நிகண்டு
128. அகத்தியர் முப்பத்தாறு
129. அகத்தியர் முப்பு
130. அகத்தியர் முன் 80
131. அகத்தியர் முன்னூல் 80
132. அகத்தியர் ரச குளிகை
133. அகத்தியர் ரச மணி
134. அகத்தியர் ரசவாத சூத்திரம்
135. அகத்தியர் ரண வைத்தியம்
136. அகத்தியர் ரத்தினச் சுருக்கம்
137. அகத்தியர் லேகிய வகை
138. அகத்தியர் வகாரத்திரய சூத்திரம் 200
139. அகத்தியர் வல்லாதி
140. அகத்தியர் வழலை
141. அகத்தியர் வாக்கியம்
142. அகத்தியர் வாக்கியம் – சூரணவகை 50
143. அகத்தியர் வாக்கியம் – நெய் வகை
144. அகத்தியர் வாக்கியம் – இலேகிய வகை
145. அகத்தியர் வாகடச் சூத்திரம்
146. அகத்தியர் வாகடத் திரட்டு

147. அகத்தியர் வாகட வச்சிரகாயம்
148. அகத்தியர் வாகட வெண்பா
149. அகத்தியர் வாகடம்
150. அகத்தியர் வாதச் சூத்திரம்
151. அகத்தியர் வாதத் திறவுகோல் 48
152. அகத்தியர் வாதம்
153. அகத்தியர் வாலை தீட்சை
154. அகத்தியர் வாலை பரிபூரண வைத்திய நாடி சூத்திரம்
155. அகத்தியர் வாலை முப்பு 30
156. அகத்தியர் வாலை வாகடம்
157. அகத்தியர் விதிநூல் முவகைக் காண்டம்
158. அகத்தியர் விஷபேதி வைத்தியம்
159. அகத்தியர் வெண்கார மெழுகு
160. அகத்தியர் வைசூரி நூல்
161. அகத்தியர் வைசூரி மாலை
162. அகத்தியர் வைசூரி வாகடம்
163. அகத்தியர் வைத்தியக் கர்மகாண்டம்
164. அகத்தியர் வைத்தியச் சதகம்
165. அகத்தியர் வைத்தியச் சிந்தாமணி
166. அகத்தியர் வைத்தியச் சூடாமணி
167. அகத்தியர் வைத்தியச் சூத்திரம்
168. அகத்தியர் வைத்தியச் செந்தூரம் 300
169. அகத்தியர் வைத்தியப் பரிபூரணம் 400
170. அகத்தியர் வைத்தியப் பலதிரட்டுச் சூத்திரம்
171. அகத்தியர் வைத்தியப் பாடல்
172. அகத்தியர் வைத்தியப் பின்னூல்
173. அகத்தியர் வைத்திய ரத்தின சுருக்கம் 360 (நாடி நிதானம்)
174. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360

175. அகத்தியர் வைத்திய வல்லாதி
176. அகத்தியர் வைத்திய வாகடம்
177. அகத்தியர் வைத்தியக் கண்ணாடி
178. அகத்தியர் வைத்தியக் கும்மி
179. அகத்தியர் வைத்தியச் சரக்குப் பெயர் அகராதி
180. அகத்தியர் வைத்தியச் சுருக்கம்
181. அகத்தியர் வைத்தியம் 1600
182. அகத்தியர் வைத்தியம் 1500
183. அகத்தியர் வைத்தியம் முன் 50
184. அகத்தியர் வைத்திய ரத்னாகரம்
185. அகத்தியர் வைத்தியர் சாரம்
186. அகத்தீஸ்வரர் தீட்சைவிதி வைத்திய நூல்
187. தட்சிணாமூர்த்தி குருமுகம் நூறு

⌘⌘